# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/24 - 2019 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2019.01.09

*2105/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட (திருத்தப்பட்ட) 2008 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் மீளாய்வு அங்கீகாரம் தொடர்பான அறிவித்தல்*

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8(ஊ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், காலத்துக்கு காலம் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி சட்டத்தின் 8(ஏ) ஆம் பிரிவின் கீழ், (திருத்தப்பட்ட) திட்டமிடல் மற்றும் கட்டட நிர்மாண ஒழுங்குவிதிகள் 2008 இற்கு சேர்க்கப்பட வேண்டியுள்ள முன்மொழியப்பட்ட திருத்த மீளாய்வு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8(ஏ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனால் (1999 ஆம் ஆண்டின் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒரு திருத்தமாக இருக்கின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் திருத்தம் 2008 இதன் கீழ் விபரிக்கப்பட்ட ஏற்புடைய பிரிவுகளுக்கான திருத்தங்களுக்கு இத்தால் நான் அங்கீகாரம் அளிக்கின்றேன்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 5 ஆம் பிரிவின் திருத்தம்.

01. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 5 ஆம் பிரிவு பின்வரும் ஏற்பாடுகளை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :-

i. "விசேட கலப்பு குடியிருப்பு வலயம்" முதல் "கலப்பு அபிவிருத்தி வலயம்" வரை டட்லி சேனாநாயக்க மாவத்தை மற்றும் பௌத்தாலோக மாவத்தை உட்பட டி. எஸ். சேனநாயக்க சந்தி என்பவற்றால் எல்லைகளைக் கொண்ட பிரதேசத்தின் வலயத்தை மாற்றுதல் ;

ii. "விசேட கலப்பு குடியிருப்பு வலயம்" முதல் "கலப்பு அபிவிருத்தி வலயம்" வரை ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கர்னல் டீ. ஜீ. ஜயவர்த்தன மாவத்தை, ப்லவர் டெரஸ் மற்றும் சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை என்பவற்றினால் எல்லைகளாக்கப்பட்ட பிரதேசத்தின் வலயத்தை மாற்றுதல் ;

iii. “விசேட கலப்பு குடியிருப்பு வலயம்” முதல் “கலப்பு அபிவிருத்தி வலயம்” வரை டீ.ஜீ. ஜயவர்த்தன மாவத்தை மற்றும் யூனியன் ப்ளேஸ் என்பவற்றினால் எல்லைகளைக் கொண்ட பிரதேசத்தின் வலயத்தை மாற்றுதல்.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), இணைப்பு I இன் v ஆம் பிரிவின் திருத்தம்.*

02. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 33 ஆம் பிரிவு பின்வரும் ஏற்பாடுகளை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :-

i. 15 மீற்றர் கட்டட ரேகை அகலத்துக்கு பதிலாக 12 மீற்றர் அகலம் வரை எலோய் எவன்யு கட்டட ரேகை அகலத்தை குறைப்பதற்கும் மற்றும் இணைப்பு 1 இன் அட்டவணை V இன் 11 ஆம் இலக்க வரிசையை திருத்துவதற்கும் ;

ii. 12.2 மீற்றர் அகல கட்டட ரேகைக்கு பதிலாக பாதையின் அருகில் இருந்து 12 ஆவது லேனில் கட்டட ரேகையை 5 அடியாக வைப்பதற்கும் மற்றும் இணைப்பின் அட்டவணை V இன் வரிசை 250 என குறிக்கப்பட்டிருக்கும் வீதியின் கட்டிட எல்லையை திருத்துவதற்கும்.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 1 (அ) ஆம் பிரிவின் உப அட்டவணையின் திருத்தம்.*

03. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் அட்டவணை 1A பிரிவு பின்வரும் ஏற்பாடுகளை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :-

கட்டண அட்டவணை II ஆக (திருத்தப்பட்ட) 2008 கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் அட்டவணை 1A இற்கு பின்வரும் 1B ஆக கணிப்பீட்டு அட்டவணை சேர்க்கப்படுகின்றது.

**அட்டவணை 1B**

| அபிவிருத்திச் செயற்பாடுகள் மீதான மேன்முறையீடு | அறவிடப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|
| 1 ஆம் மேன்முறையீடு | இலவசம் |
| 2 ஆம் மேன்முறையீடு | அபிவிருத்திக் கிரயத்தின் 25% |
| 3 ஆம் மேன்முறையீடு | அபிவிருத்திக் கிரயத்தின் 50% |
| 4 ஆம் மேன்முறையீடு | அபிவிருத்திக் கிரயத்தின் 75% |

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 7.33 ஆம் புதிய பிரிவின் திருத்தம்.*

4. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 7.33 ஆம் என புதிய பிரிவு பின்வரும் ஏற்பாடுகளை சேர்ப்பதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :-

பிரிவு 7.33 “விண்ணப்பதாரியால் மேன்முறையீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற விடத்து, காணியின் விஸ்தீரணம் மற்றும் பாதையின் ஓரம் என்பன அடுத்த மேல் மட்டத்துக்காக தேவைப்படுகின்ற எல்லையின் 10 சதவீதத்துக்குள்ளும் மற்றும் பாதை ஓரத்துக்குள்ளும் இருந்தால், சகல ஏனைய தேவைப்பாடுகளும் திருப்தி செய்யப்பட்டும் இருந்தால்,” C1 படிவத்தில் அனுமதிக்கப்படக் கூடிய மட்டங்களின் வரையறையின் உடனடுத்த அதிகூடிய எல்லைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.”.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 4.1 (இ) ஆம் பிரிவின் திருத்தம்.*

5. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 4.1 (உ) பிரிவு நீக்கப்படுகின்றது.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்), 9.1(a) iv,இன் புதிய பிரிவாக சேர்த்தல்.*

6. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 9 பிரிவு ஆக புதிய பிரிவினை உட்செலுத்துவதன் மூலம் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது;

“பாதையின் இரண்டு பக்கத்துக்கும் பாதையின் மத்திய ரேகையிலிருந்து சுவீகரிப்பு ரேகையை 4.5 மீற்றரைப் பிரகடனப்படுத்துவதற்கும் மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்கு கொழும்பு மாநகரசபைக்கு மாத்திரம் பராமரிப்புக்காக அல்லது 9 மீற்றர்

வரை அணுகுவழிப் பாதையை அகலமாக்குவதற்காக கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து கிருலப்பனை வாய்க்கால் வரை பொதுப் பாதையைத் தொடர்புபடுத்துகின்ற மெரைன் ட்ரைவ் மற்றும் காலி வீதி என்பவற்றுக்கு ஏற்புடையதான அபிவிருத்திச் செயற்பாடுகளை வேண்டுகின்ற சந்தர்ப்பத்தில் இலசவமாக உள்ளூராட்சி அதிகாரசபைக்கு நன்கொடையளிப்பதற்கும். இது வீதிரேகைகள் இல்லாத பாதைகளுக்கும் மற்றும் ஒரு கட்டட ரேகையுடன் பௌதிக அகலம் 9 மீற்றருக்கும் குறைவாக இருக்கின்ற பாதைகளுக்கும் மற்றும் 9 மீற்றரை விடவும் குறைவாக இருக்கின்ற அகலத்தைக் கொண்ட வீதி ரேகைக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும்.".

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 3 (i) (இ) (ii) ஆம் பிரிவின் திருத்தம்.*

7. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் அத்தியாயம் II இன் 3(1) (இ) (ii) ஆம் பிரிவு நீக்கப்பட்டு பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்படுகின்றது.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 13 (2) ஆம் பிரிவின் திருத்தம்.*

8. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரிவு 13(2) ஆம் பிரிவு பின்வரும் பிரிவை சேர்ப்பதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :-

"இத்தகைய ஒழுங்குவிதிகளின் சட்டத்தின் ஏற்பாடு மற்றும் கட்டட நிர்மாணிப்பு மற்றும் ஏதேனும் ஏனைய எழுத்து மூல சட்டம் மற்றும் விபரமான அமைப்பியல் பொறியியல் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு கணிப்பீடுகளை தயாரிக்கின்ற உரிய தகுதிவாய்ந்த ஆள் ஒருவரால் சான்றுப்படுத்தப்படுதல் என்பவற்றுக்கு ஏற்ப மண் சோதனை அறிக்கையின் அடிப்படையில் 'விபரமான அமைப்பியல் பொறியியலாளர் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு கணிப்பீடுகள்' தயாரிக்கப்பட வேண்டும்.".

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), இணைப்பு III இன் vi(அ-உ) ஆம் பிரிவின் திருத்தம்.*

9. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 16(அ) பிரிவானது அந்தப் பிரிவுக்கு (ஐ) பிரிவை சேர்ப்பதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8(ஒ) பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அனுமதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட கட்டட வேலைகள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளின் கீழ் அட்டவணை v இல் குறிப்பிடப்பட்ட பிரகடனப்படுத்தல் படிவத்தை (இணைப்பு III அட்டவணை vi (அ-உ) உரிய முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.".

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 16 (இ) ஆம் பிரிவின் திருத்தம்.*

10. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 16(இ) பிரிவு "மேற்பார்வை செய்யவும்" என்ற சொற்களுக்கு உடன் முன்னர் "பரிசோதனை செய்யவும்" என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 16 (இ) ஆம் பிரிவின் திருத்தம்.*

11. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 16(இ) பிரிவு 16(இ) i, 16(இ) ii மற்றும் 16(இ) iii, போன்ற பிரிவுகளை சேர்ப்பதன் மூலம் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(i) நடுத்தர உயர் கட்டடம் மற்றும் மிக உயர் கட்டடம் ஒன்று தொடர்பில், ஆரம்பிப்பதற்கான எண்ணத்தின் அறிவித்தல் அதிகார சபைக்கு வழங்குகின்ற திகதியின் ஆரம்பத்திலிருந்து கட்டட வேலை முடியும் வரை ஒவ்வொரு 06 மாதத்திலும் ;

(ii) இந்த ஒழுங்குவிதிகளின் 16 (இ) பிரிவின் (i) பந்தி தவிர்த்து சகல ஏனைய கட்டடங்கள் விடயத்தில், ஆரம்பிப்பதற்கான எண்ணத்தின் அறிவித்தல் அதிகார சபைக்கு வழங்குகின்ற திகதியின் ஆரம்பத்திலிருந்து கட்டட வேலை முடியும் வரை ஒவ்வொரு 03 மாதத்திலும். ;

(iii) எவரேனும் ஏனைய ஆளுக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகள் பிரதேசம் தொடர்பில் கட்டடத்துக்கான உருப்படுத்தல் சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு முன்னர், தலைவரினால் தரப்படுகின்ற வழிகாட்டலுக்கு அங்கீகரிக்கின்ற முகவரினால் மேற்கொள்ளப்படுகின்ற இறுதிப் பரிசோதனையில் பங்குபற்றுதல்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 16 (இ) ஆம் பிரிவின் திருத்தம்.

12. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் 16(ஈ) பிரிவு பின்வரும் பந்தியை பதிலீடு செய்வதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"கட்டட வேலைகள் மீது 16(இ) i ஒழுங்குவிதியின் கீழ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் முன்னேற்ற அறிக்கையை அதிகார சபைக்கு சமர்ப்பிக்கவும் அல்லது பொருத்தமாக இருக்கின்றவிடத்து அதனுடன் தொடர்புறுகின்ற அத்தகைய முன்னேற்ற அறிக்கையை கட்டடத்தின் வேலைகளின் பொருத்தமான நேரங்களில் அல்லது பொருத்தமான கட்டங்களில் கீழே விபரிக்கின்றவாறு இருக்கும்."

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம்1999 (திருத்தம்), 22 ஆம் பிரிவின் திருத்தம்.

13. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 22 ஆம் பிரிவானது 22 (ஈ)பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"சகல உரிய முகவரகங்களுடன் கூட்டு சோதனையை பூர்த்தி செய்தல்.".

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 61 ஆம் பிரிவின் திருத்தம்.

14. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 61 ஆம் பிரிவானது 61(அ) மற்றும் 61(ஆ) பிரிவுகளைப் பதிலீடு செய்வதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

61 (a). இத்தகைய ஒழுங்குவிதிகளின் 19 (இ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டட வேலையை ஆரம்பிப்பதற்கான எண்ணத்தின் அறிவித்தலுடன் சேர்த்து அதிகார சபைக்கு அவரது பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தை கட்டடத்தின் உரிமையாளர் அல்லது விருத்தியாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

61 (b). (i) அத்தகைய காப்புறுதி ஒப்பந்தத்தை வழங்கத் தவறுகின்றவிடத்து, இத்தகைய ஒழுங்குவிதிகளின் 12 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான உரிமை அதிகார சபைக்கு இருக்கின்றது.

(ii) கட்டட உறுதிப்படுத்தல் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் வரை 61(ஆ) (i) பிரிவு ஒழுங்குவிதியில் குறிப்பிட்ட காப்புறுதி ஒப்பந்தத்தை உரிமையாளர்/ விருத்தியாளர் நீடிக்க வேண்டும்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 70 ஆம் பிரிவின் திருத்தம்.

15. (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 70 ஆம் பிரிவானது பின்வரும் உப பிரிவை பதிலீடு செய்வதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"பட்டயம் பெற்ற கட்டடக் கலைஞர் அல்லது கட்டடக் கலைஞர் என்பதன் கருத்து 1976 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட இலங்கைக் கட்டடக் கலைஞர் நிறுவனத்தின் ஒரு இணை அங்கத்தவர் மற்றும் (பிரதான சட்டவாக்கத்துக்கு திருத்தம் செய்யப்பட்ட) 1996 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கட்டடக் கலைஞர்கள் பதிவு செய்தல் சபையின் கீழ் செயற்படுவதற்கு பதிவு செய்யப்பட்ட கட்டடக் கலைஞர் அல்லது 2014 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) சட்டத்தின் கீழ் கட்டடக் கலைஞராக செயற்படுவதற்கு பதிவு செய்யப்பட்ட ஒரு தகைமையுடைய கட்டடக் கலைஞர் ஆகும்".

"நகரத் திட்டமிடலாளர்" என்பதன் பொருள் 1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட இலங்கை நகரத் திட்டமிடலாளர்கள் நிறுவனத்தின் சக அங்கத்தவர் ஒருவர் என்பதாகும்.".

"பொறியியலாளர்" என்பதன் பொருள் 'தகைமையுடைய ஆள்' அவர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் ஒரு சக அங்கத்தவர் என்பதோடு 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்.

*16.* (பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 33(2) ஆம் பிரிவானது பிரிவு 33(6) என ஒரு புதிய பந்தியை சேர்ப்பதன் மூலம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 (திருத்தம்), 33 ஆம் பிரிவின் திருத்தம்.*

பிரிவு 33(6) – பிரிவு 33 இல் குறிப்பிட்டவற்றுக்கு முரணாக ஏதேனும் எது எவ்வாறு இருந்த போதும், 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு வீதியாக இருக்கின்றது என்பதோடு, அது கொழும்பு மாநகர சபை பிரிவுக்குள் பாதைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் விதிக்கப்பட்ட கட்டட வரையறைகளுக்கு அமைவானதாக இருக்க வேண்டும்.

*17.* பிரதான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தின் 8.1(வலயம் III அபிவிருத்தி வழிகாட்டி திட்டமிடல் - பகுதி I இன் பாகம் என குறிப்பிடப்படுகின்ற) பிரிவானது பின்வரும் 8.1.2 பந்தியை சேர்ப்பதன் மூலம் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 2008(திருத்தம்), 8.1 ஆம் பிரிவின் திருத்தம்.*

பிரிவு 8.1.2 - பிரிவு 8.1(ஆ) மற்றும் 8.1(ஈ) இல் குறிப்பிட்டவற்றுக்கு முரணாக ஏதேனும் எது எவ்வாறு இருந்த போதும், கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் அபிவிருத்தி வழிகாட்டல் திட்டப் பிரிவு I இன் வலயம் III இல் (நிறுவன ரீதியான வலயம்) மாடிக் கட்டடங்கள் தவிர குடியிருப்பு செயற்பாடுகளை அனுமதிப்பதற்கு.

*18.* கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்) எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் இணைப்பு III இன் அட்டவணை vi (அ-உ) என மேலும் திருத்தப்படுகின்றது.

*கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் 1999 மற்றும் 2008 (திருத்தம்), இணைப்பு III அட்டவணை vi (அ-உ) ஆம் பிரிவின் திருத்தம்.*

**இணைப்பு III**

அட்டவணை vi (a) – விண்ணப்பதாரரின் பிரகடனம்

அட்டவணை vi (b) – காணி உரிமையாளரின் பிரகடனம்

அட்டவணை vi (c) – கட்டிடக் கலைஞர்/திட்டமிடலாளர் பிரகடனம்

அட்டவணை vi (d) – தகுதிபெற்ற நபரின் (கட்டிடக் கலைஞர்/பொறியியலாளர்) பிரகடனம்

அட்டவணை vi (e) – தகுதிபெற்ற நபரின் (கட்டிடப் பொறியியலாளர்) பிரகடனம்

# උපලේඛන VI /அட்டவணைVI / Schedule VI
# (ඇමුණුම - අ / இணைப்பு - அ / Annexure - a)

**අයදුම්කරුගේ/වන්ගේ ප්‍රකාශය :**

(අයදුම්කරු ව්‍යාපාර ආයතනයක් හෝ සමාගමක් වේ නම් අයදුම්පත එම ආයතනයේ අධ්‍යක්ෂවරයකු හෝ බලයලත් නියෝජිතයකු විසින් සම්පූර්ණකල යුතු අතර ආයතන මුද්‍රාව සටහන් කල යුතුය.)

මේ සමග අමුණා ඇති මා/අප විසින් අයදුම්කරු ලෙස අත්සන් කරන ලද සැලසුම්පත් හා අනෙකුත් අදාල ලිපි ලේඛණ, මෙම අයදුම්පතෙහි හා අදාල ලේඛනවල සදහන් සංවර්ධන කටයුත්ත සිදුකිරීමට නාගරික සංවර්ධන අධිකාරියේ අනුමැතිය සඳහා මම/අප ඉදිරිපත් කරමි/කරමු.

මා/අප විසින් මේ සමග ඉදිරිපත් කරන ලද තොරතුරු සත්‍ය හා නිවැරදි බවට මම /අපි සහතික කරමි/කරමු. (ඇ) අන්තර්ගත කලයුතු සියලුම ලිපි ලේඛණ සමග අයදුම්පත ඉදිරිපත් කරන තුරු මෙම අයදුම්පතට බලපවත්වන භාර ගැනීමේ දිනයක් සදහන් නොකරනු ලබන බව මම දනිමි. (ආ) අසම්පූර්ණ අයදුම්පත් භාර නොගන්නා බවටත්, (ඇ) අයදුම්පත සලකා බැලීමේ දී හදුනාගන්නා ලද අඩුලුහුඩුකම් මා වෙත දින 08 ක් තුල දැනුම් දෙන බවත්, එවන් අවස්ථාවන්හිදී අදාල අඩුලුහුඩුකම් සම්පූර්ණ කරන දිනය මෙම අයදුම්පතට බලපැවැත්වෙන භාරගැනීමේ දිනය ලෙස සලකන බව මම දනිමි. යම් විධියකින් එම සපයා ඇති තොරතුරු අසත්‍ය බවට නාගරික සංවර්ධන අධිකාරිය විසින් තහවුරු කරගත හොත්, ඉදිකිරීමට අදාලව නිකුත් කල සංවර්ධන බලපත්‍රය අවලංගු කල හැකි බවද මා දනිමි.

......................,
අයදුම්කරුගේ අත්සන.

දිනය :......................

***விண்ணப்பதாரர்/தாரர்களின் பிரகடனம்*** :

*(விண்ணப்பதாரர் ஒரு வியாபார அமைப்போ அல்லது நிறுவனமாக இருப்பின் அவ்விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தின் பணிப்பாளரோ அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாளராலோ பூரணப்படுத்தப்பட்டு அதில் நிறுவனத்தின் இலச்சினை இடப்படல் வேண்டும்.)*

*என்னால்/எங்களால் இத்துடன் இணைக்கப்பட்ட விண்ணப்பதாரியாக கையொப்பமிடப்பட்ட திட்ட படவரைபுகள் மற்றும் தொடர்புடைய ஏனைய ஆவணங்கள், இவ்விண்ணப்பத்தில் மற்றும் ஏனைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிக்காக நான்/நாங்கள் முன்வைக்கின்றேன்/றோம்.*

*என்னால்/எங்களால் இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென நான்/நாங்கள் உறுதிப்படுத்துகின்றேன்/றோம். அத்துடன் (அ) உள்ளக நடவடிக்கைகள் அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பப் படிவம் முன்வைக்கப்படும் வரை இந்த விண்ணப்பப் படிவம் பொறுப்பெடுக்கப்படும் திகதியானது குறிப்பிடப்படமாட்டாது என நான் அறிவேன். (ஆ) பூரணமில்லாத விண்ணப்பப்படிவம் பொறுப்பெடுக்க மாட்டாதெனவும், (இ) விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் 08 நாட்களுக்குள் எனக்கு அறிவிக்கப்படுமென்தையும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட குறைபாடுகள் பூரணப்படுத்தப்படும் திகதியே அவ்விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியாக கருதப்படும் எனவும் நான் அறிவேன். ஏதாவது ஒரு வகையில் விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் பொய்யானவையென நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்டால், நிர்மாணிப்பிற்காக வழங்கப்படும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என நான் அறிவேன்.*

--------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*திகதி* :----.

**Declaration of the Applicant/s :**

(If Applicant/s is/are a Company or Association the form must be signed by a Director or Authorized person under common seal.)

I/We as the applicant hereby apply for the approval in writing from the Urban Development Authority to carry out the development described in the application plans drawings and specifications hereto annexed and signed by me/us.

I/We declare that the information furnished herein by me/us is true and accurate. and also understand that, (a) An effective date will be given to my application only if plans and documents specified in the application accompanying this application have been submitted, (b) The incomplete applications will not be accepted nor registered. (c) I will be informed within 8 days of any major shortcomings, which with prevent the determination of this application. in this case the effective date given will no longer apply and a new effective date will be given once all the shortcomings are clearly.

I/We am/are aware that if any of the information provided by me/us is/are found to be false by the Urban Development Authority be permit issued with regard to the development will be cancelled.

……………                                                                                                ……………
Date                                                                                                Applicant's Signature

**උපලේඛන VI /அட்டவணை VI / Schedule VI**
**(ඇමුණුම - ආ / இணைப்பு - ஆ / Annexure - b)**

**ඉඩම් හිමිකරුගේ ප්‍රකාශය :**

මම /අපි අදාල ගොඩනැගිල්ල ඉදිකිරීමට යෝජිත ඉඩමේ නිත්‍යානුකූල හිමිකරුවන්/ බදුකරුවන් වන බවත් අදාල හිමිකම් ප්‍රකාශිත ලේඛණ මහේස්ත්‍රාත්වරයකු, දිසා විනිසුරුවරයකු, ප්‍රසිද්ධ නොතාරිස්වරයකු හෝ අදාල බලයලත් නිලධාරියකු විසින් සහතික කර මේ සමග ඉදිරිපත් කරමි. තවද මගේ ඉඩමේ අදාල සංවර්ධනය සඳහා ඉහත අත්සන් කර ඇති අයදුම්කරුට නෛතික බලය පවරා ඇති බවට සහතික කරමි.

.......................,
ඉඩම්හිමිකරුගේ අත්සන.

දිනය :......................

***காணி உரிமையாளரின் பிரகடனம் :***

*நான் /நாங்கள் குறிப்பிட்ட கட்டடம் நிர்மாணிப்பிற்காக பிரேரிக்கப்பட்ட காணியின் சட்டரீதியான உரிமையாளர் /குத்தகையாளர் என்பதுடன், குறிப்பிட்ட உரித்து பிரகடனம், நீதிவான் /மாவட்ட நீதிபதி/பிரசித்த நொத்தாரிசு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு இத்துடன் முன் வைக்கின்றேன்/றோம். மேலும், எனது /எங்களது காணியின் குறிப்பிட்ட அபிவிருத்திக்காக மேல் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பதாரருக்கு பௌதிக உரித்து அளிக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துகின்றேன்/றோம்.*

--------,
*காணி உரிமையாளரின் கையொப்பம்.*

*திகதி* :----.

**Declaration of the Owner of the Land :**

I/We declare that I am/we are the absolute owner/lessee of the land on which the developer intends to erect the building and I am/we are enclosing copies of the relevant documents of ownership/lease certified by Magistrate/ DC judge/ Notary public or gazette officer authorized by the commission on this behalf and I/We have given my/our legal authority to undertake above development on my land.

................................,
Owner of the Land Signature.

Date : ...............

## උපලේඛන VI / *அட்டவணை* VI / **Schedule VI**
## (ඇමුණුම - ඈ / *இணைப்பு - இ* / **Annexure - c)**

**වාස්තු විද්‍යාඥයා/සැලසුම් ශිල්පියා විසින් සම්පූර්ණ කිරීම සඳහා :**

යෝජිත ගොඩනැගිලිවල මහල්වල වර්ග ප්‍රමාණයේ එකතුව වර්ග මීටර් 280 ට අඩු හෝ මායිම්වල බිත්ති හෝ කොන්ක්‍රීට් කුළුණු පිහිටා නැති විට නාගරික සංවර්ධන අධිකාරී පනත ප්‍රකාරව පිළියෙළ කර ඇති සැලසුම් හා ගොඩනැගිලි රෙගුලාසිවලට අනුකූලව මෙම පරිශ්‍ර හා ගොඩනැගිලි සැලසුම් පිළියෙළ කර ඇති බවට මෙයින් සහතික කරමි. තවද යෝජිත ගොඩනැගිල්ලේ සම්පූර්ණ ගෙබිම් ප්‍රමාණය වර්ග මිටර් 280 නොඉක්මවන බව හා බිත්ති කුළුණු/මායිම්වල නොපිහිටන බව හා අත්තිවාරම් පයිල් හෝ පහුරු අත්තිවාරමක් නොවන බවද සහතික කරමි.

..............................,
වාස්තු විද්‍යාඥයා/සැලසුම් ශිල්පියාගේ අත්සන.

දිනය :-----.

***கட்டட வரைஞர்/திட்டமிடலாளரின் சான்றிதழ் :***

*பிரேரிக்கப்பட்ட கட்டடத்தின் மாடிகளின் சதுர அளவுகளின் மொத்தத் தொகை 280 சதுர மீற்றர்களுக்கு குறைவாகவும், எல்லைகளின் சுவர்கள் அல்லது கொங்கிறீட் (தூண் அமைக்கப்படாவிட்டால்) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளுக்கமைய இந்த வளாகம் மற்றும் கட்டட மாதிரிப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துகின்றேன். மேலும், பிரேரிக்கப்பட்டுள்ள கட்டடத்தின் தள விஸ்தீரணம் 280 சதுர மீற்றர்களுக்கு மேல் தாண்டாது என்பதுடன், சுவர் தூண்/எல்லைகளில் அமையாது என்பதுடன் அடித்தள துளையிடல் மற்றும் தள அத்திவாரம் இல்லையென உறுதிப்படுத்துகின்றேன்.*

--------,
*கட்டட வரைஞர்/திட்டமிடலாளர் கையொப்பம்.*

*திகதி* :----.

**To be filled by the Architect/Draughtsman :**

I certify that I have gone through the building and planning regulations made under the provisions of UDA law and have satisfied that the site and building plans are in accordance with provisions contained therein and alternations to existing building which does not after any structural part thereof and the total floor area of the building is nor exceeding 280 square meters. the walls or columns are not situated on the boundary of the property and the construction does not involve pile or raft foundation.

.......................,
Architect/Draughtsman Signature.

Date : ...................

## උපලේඛන VI / அட்டவணை VI / Schedule VI
## (ඇමුණුම - ඈ / இணைப்பு - ஈ / Annexure - d)

**සුදුසුකම්ලත් තැනැත්තා විසින් සහතික කිරීම සඳහා :**

(යෝජිත ගොඩනැගිලිවල මහල්වල වර්ග ප්‍රමාණයේ එකතුව වර්ග මීටර් 280 ඉක්මවා ඇත්නම් හෝ මායිම්වල බිත්ති හෝ කුළුණු පිහිටා ඇත්නම්)

මා විසින් .................................................. දරන ස්ථානය සඳහා පිළියෙළ කරන ලද සැලසුම් නාගරික සංවර්ධන අධිකාරියේ නගර සංවර්ධන සැලැස්මේ සැලසුම් හා ගොඩනැගිලි රෙගුලාසිවලට හා අනිකුත් අදාල නීති රෙගුලාසි හා ගොඩනැගිලි අවශ්‍යතා අනුව පිළියෙළ කොට පෞද්ගලිකව මවිසින්ම පරික්ෂා කොට බලා ඉදිරිපත් කර ඇති බව මෙයින් සහතික කරමි. තවද මා විසින් මගේ අනුදැනුම ඇතිව මේ සමග ඉදිරිපත් කර ඇති ලියකියවිලි කිසිවක් සාවද්‍ය ලෙස ඔප්පු වුවහොත් ඒ පිළිබඳ වගකීම මා විසින් බාර ගන්නා බවටත් මෙයින් ප්‍රකාශ කරමි.

...................,
සුදුසුකම්ලත් තැනැත්තාගේ අත්සන.

දිනය :----.

***கட்டட வரைஞர்/பொறியியலாளரின் சான்றிதழ் :***

*பிரேரிக்கப்பட்ட கட்டிடத்தின் மாடிகளின் சதுர அளவுகளின் மொத்தத் தொகை 280 சதுர மீற்றர்களுக்கு அதிகமாகவும், எல்லைகளின் சுவர்கள் அல்லது கொங்கிறீட் தூண் அமைக்கப்பட்டிருப்பின்)*

*என்னால் .................................. இலக்கமுடைய இடத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிப்படம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளுக்கு மற்றும் அனைத்து சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு தனிப்பட்ட ரீதியில் மேற்பார்வையிடப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், என்னால் எனது அனுமதியின் கீழ் அத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஏதேனும் போலியானவை என நிரூபிக்கப்பட்டால் அது தொடர்பான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்வேன் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
*கட்டட வரைஞர்/பொறியியலாளரின் கையொப்பம்.*

*திகதி* :----.

**To be filled by the Architect/ Engineer :**

(If the proposed building exceeds floor area of 280 Sq.M of walls and columns are situated onthe boundary)

I certify that I have prepared the Architectural plans for the property at ........................................... and I have personally checked and verified that the plan is in accordance with the planning and building regulations of the Urban Development Authority (UDA) and other relevant laws, Enactment, and building requirements. I am fully aware that I shall be liable for and offence if I knowingly make or product any information which is false.

.......................,
Architect/Engineer Signature.

Date :----.

## උපලේඛන VI /அட்டவணை VI / Schedule VI
## (ඇමුණුම - ඉ / இணைப்பு - உ / Annexure - e)

**සුදුසුකම්ලත් තැනැත්තා විසින් සහතික කිරීම සඳහා (ව්‍යුහමය ඉංජිනේරු) :**

(නාගරික සංවර්ධන අධිකාරියේ නගර සංවර්ධන සැලැස්මේ සැලසුම් හා ගොඩනැගිලි රෙගුලාසිවලට අනුව ව්‍යුහගත සැලැස්ම සැකසීම සහ යෝජිත ගොඩනැගිල්ලේ ස්ථායීතාවය හා අවට ගොඩනැගිලි හා දේපල ආරක්ෂාව)

සුදුසුකම්ලත් ව්‍යුහමය ඉංජිනේරුවරයකු වන මා 2014 අංක 33 (CIDA) යටතේ ලියාපදිංචි, ශ්‍රී ලංකා ඉංජිනේරුවරුන්ගේ ආයතනයේ හා ව්‍යුහාත්මක ඉංජිනේරුවරුන්ගේ සංගමයේ සාමාජිකයකු වෙමි. ව්‍යුහාත්මක සැලසුම් පිළියෙළ කිරීමේ දී sectorial committee on building and construction materials මගින් අනුමතකරන ලද Euro codes and National Annexures/ relevant British standards වලට අනුකූලව ව්‍යුහමය සැලසුම් හා සැලසුම් ගණනය කිරීම පිළියෙල කරන බව සහතික කරමි.

මා විසින් ............................ දරණ ස්ථානයේ යෝජිත ගොඩනැගිල්ල සඳහා ව්‍යුහමය සැලසුම් හා සැලසුම් ගණනය කිරීම පිළියෙල කර ඇත. එමනිසා මා ගොඩනැගිල්ලේ ව්‍යුහමය ස්ථායීතාවය පිළිබඳ ගොඩනැගිල්ල ඉදිකිරීම අතරතුර හා ගොඩනැගිල්ල ඉදිකිරීමෙන් පසුව සහතික වෙමි. එසේම අනුකූලතා සහතිකය ලබාගන්න තෙක් අසල්වැසි ගොඩනැගිලි ව්‍යුහ හා දේපලවලට හානි වලක්වා ගැනීම සඳහා මා විසින් අවශ්‍ය උපදෙස් ලබාදෙන අතර ඉදිකිරීම් කටයුතු කරන කාලයතුලදී නිරතුරුව වැඩබිම අධීක්ෂණය කරන බවට සහතික වෙමි.

......................,
ව්‍යුහමය ඉංජිනේරුගේ අත්සන.

දිනය : .................

***தகுதி வாய்ந்த நபரின் உறுதிச் சான்றிதழ் (கட்டட பொறியியலாளர்) :***

*(நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகர அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகளுக்கமைய பொறியியல் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு, பிரேரிக்கப்பட்ட கட்டடத்தின் அமைவிடம் மற்றும் சுற்றியுள்ள கட்டடங்கள் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பு).*

*தகுதிவாய்ந்த பொறியியலாளராகிய நான், 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை* (CIDA) *சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் மற்றும் பொறியியல் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு பொறியியலாளர்களின் சங்கத்தின் அங்கத்தவராவேன். பொறியியல் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கையில்* Euro code and National Annexure (EC) மற்றும் (BS) *இற்கு அமைவாக பொறியியல் வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பு கணிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென உறுதிப்படுத்துகின்றேன்.*

*என்னால்* ........................... *இலக்கமுடைய இடத்திற்காக பிரேரிக்கப்பட்ட கட்டிடத்திற்காக பொறியியல் வரைபுகள் மற்றும் வடிவமைப்பு கணிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*ஆதலால், என்னால் கட்டடத்தின் அமைப்பு பற்றி கட்டட நிர்மாணிப்பு வேளைகளில் மற்றும் நிர்மாணிப்பு முடிவடைந்த பிறகும் மேற்பார்வையிடப்பட்டதென உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இயைபுச் சான்றிதழ் வழங்கப்படும் வரை பக்கத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களுக்கு ஏதேனும் சேதங்கள் ஏற்படாதவாறு என்னால் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், நிர்மாணிப்புக் காலகட்டத்தில் தவறாது மேற்பார்வை நடவடிக்கைகளில் இருப்பேன் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
*கட்டட பொறியியலாளரின் கையொப்பம்.*

*திகதி* :----.

**To be certified by a Qualified Person (Structural Engineer) :**

( For structural design stability of the proposed building and safety of adjacent buildings/ neighboring properties as per the planning and building regulations of the Urban Development Authority)

I am a qualified Structural Engineer who is a member of the Institution of Engineers of Sri Lanka and registered under the CIDA Act No. 33 of 2014. I hereby state that I have followed the guidelines and standards given by the Euro codes and National Annexures/ relevant British standards which have been approved by the sectorial committee on building and construction materials.

I hereby certify that the structural plans and design calculations for the proposed building situated at ...................................................... are prepared by me and thereby ensure the structural stability of the building during and after construction.

I further certify that during the construction period, I will make periodic supervisions and provide necessary methods to protect against damages to adjacent structures and neighboring properties until the certificate of conformity is obtained.

----,
Structural Engineer Signature.

Date : ............

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க,*
*மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2019, சனவரி 02.*

*01-559*